

## இறுதிச் செபம்:

அன்பு இறைவா, நாங்கள் நடக்கும் பாதையில் ஒளியாக இருக்க உமது உதவியை நாடுகிறோம். ஒவ்வொருவருடன் சேர்ந்து பணிபுரியும் போதும் வாழும் போதும் எங்களுக்குப் பாசத்தையும் பரிவையும் தந்தருளும். இயேசுவின் பெயரால் மன்றாடுகிறோம், ஆமென்.

## முடிவு பாடல்:

### ஒளியை ஏற்றி

பல்லவி:

ஒளியை ஏற்றி கையில் ஏந்தி
உலகுக் கெல்லாம் சுடரைக் காட்டி
அருள் ஓங்க இருள் நீங்க
அன்பை காட்டவே

1. எங்கும் ஒளிர்க என்னும் தீபம்
நான்கு திக்கும் ஒளிரட்டும் - அது
நாளெல்லாம் ஒளி வீசியே - நன்மை
பயக்கும் என்றே வாழ்ந்திடு 2

2. குன்றின் மேலே இட்ட தீபம்
குனிந்து நோக்குதல் இல்லையே ஒரு
குடத்தினுள் வைத்த விளக்குமே வீட்டில்
எவர்க்கும் பயன் தரல் இல்லையே 2

செபமாலை அல்லது இறைஇரக்கச் செபத்தைத் தொடரலாம்.

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org



# அதிசசிந்தனை




**முன்னுரை:** நாம் காணும் உலகம் வெகு விரைவாக மாறி வருகிறது. செயற்கை அறிவாற்றல், 5G உலகம், சமூகப் புரட்சி, அரசியல் கொந்தளிப்பு, எழுச்சி, ரொக்கமில்லா கட்டணம் செலுத்தும் முறை ஆகியவை நமது வாழ்க்கையோடு ஒன்றித்து விட்டன. கொவிட்-19 தொற்று நோய் காரணமாக தொடர்புக்கும் கல்விப் பணிகளுக்கும் சமூக ஊடகத்தை நாம் பெரிதும் நம்பியிருக்கிறோம். உலகம் எந்தளவுக்கு மாறிவிட்டது என்பதை இது காட்டுகிறது. சமூகத்தின் மீதும், குடும்பத்தின் மீதும், திரு அவையின் மீதும் இதனால் நேரடி தாக்கம் ஏற்பட்டுள்ளது. புலனம், கீச்சகம், முகநூல், காயலை இன்னும் இதர வகையில், ஒருவரையொருவர் எளிதாகவும் விரைவாகவும் தொடர்பு கொள்ள செய்து, ஒன்றிணைந்த சமூகத்தை நோக்கி நாம் நகர்ந்து வருகிறோம். ஆனால், உண்மை சூழ்நிலையில், நாம் ஒன்றிணைந்த சமூகமாக இருக்கிறோமா, விலகி நிற்கிறோமா?

## தொடக்கச் செபம்:

அதிசவில் ஒருவரை செபம் செய்ய அழைக்கலாம்.

## தொடக்கப் பாடல்:

### அன்பும் நட்பும் எங்குள்ளதோ

பல்லவி:
அன்பும் நட்பும் எங்குள்ளதோ
அங்கே இறைவன் இருக்கின்றார் 2

1. கிறிஸ்துவின் அன்பு
நம்மையெல்லாம்
ஒன்றாய் கூட்டி சேர்த்ததுவே
அவரில் அக்களித்திடுவோம் யாம்
அவரில் மகிழ்ச்சி கொள்வோமே
ஜீவிய தேவனுக்கு அஞ்சிடுவோம்
அவருக்கு அன்பு செய்திடுவோம்
நேரிய உள்ளத்துடனே யாம்
ஒருவரையொருவர் நேசிப்போம்

2. எனவே ஒன்றாய் நாமெல்லாம்
வந்து கூடும் போதினிலே
மனதில் வேற்றுமை கொள்ளாமல்
விழிப்பாய் இருந்துகொள்வோமே
தீய சச்சரவுகள் ஒழிந்திடுக
பிணக்குகள் எல்லாம் போய் ஒழிக
நமது மத்தியில் நம் இறைவன்
கிறிஸ்து நாதர் இருந்திடுக



## உரையாடல்:

இன்றைய காலக்கட்டத்தில் நாம் எதிர்நோக்கும் சவால்களும் மாற்றங்களும் நிகழும் வேளையில், இந்த சவால்களும் மாற்றங்களும் நம்மை எத்திசையை நோக்கி கொண்டு செல்கின்றன என்பதை அறிவது முக்கியம். அவை நம்மை ஒன்றிணைக்கின்றதா அல்லது பிரித்து வைக்கின்றதா? கடவுளை நோக்கி பயணம் செய்யும் நிலையற்ற மக்களாகிய நாம் இதனை ஆராய்ந்து பார்ப்பது நல்லது. நிலையில்லா நாம், பிரிவினையை நோக்கி திசை திருப்பப்படும் சாத்தியம் உள்ளது என்பது நிதர்சனம். அதே வேளையில், நமது கடவுள் அன்பின் கடவுள், பிரிவினை கடவுளல்ல. எனவே அவரது மக்கள் என்ற முறையில் மனஉறுதி கொண்டு, அவரது வழிகாட்டுதலையும் இறைத்திட்டத்தையும் நாடும் போது அவரைப் போல் நாம் மாறுகிறோம். குணமளிக்கும் ஒன்றிப்பின் அடையாளமாக நாம் உருமாறுவோம்.

பல்வேறு வழியில் இதனை நாம் மேற்கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும், வறியக் குடும்பங்களோடு சேர்ந்து பணிபுரிபவர்களாகவும், தன்னிறைவு கொள்வதற்கு அவர்களின் உதவிக்கரமாகவும் நாம் இருக்கலாம். ஆலயக் குழுக்கள் அல்லது அரசாங்கச் சார்பற்ற இயக்கங்களோடு சேர்ந்து, நீதிக்காக குரல் கொடுக்கலாம். பொய் செய்திகளைப் பகிர்ந்து கொள்ளாமல் அல்லது பிழையைத் திருத்திக் கொண்டால், ஒன்றிப்பையும் குணமளிப்பையும் ஊக்குவிக்க முடியும். கிறிஸ்துவர்களாக அழைக்கப்பட்டிருக்கும் நாம், கிறிஸ்துவைப் போல், ஒழுங்கீனத்தை ஒதுக்கி, பிரிவினை மத்தியில் ஒன்றிப்பை வளர்க்கும் மக்களாக இருப்போம்.

இந்த ஒன்றிப்பின் பயணத்தில் நாம் ஓரங்கட்டப்படுவதில்லை. ஏனென்றால், நம்மை நாமே மாற்றிக் கொள்வதற்கு இன்னும் நிறைய செய்ய வேண்டியுள்ளது. நிறைவை நோக்கிப் பயணம் செய்யும் நமது வாழ்வின் சில பகுதிகளில் இறைநாட்டத்திற்கு ஏற்ப இல்லாமல் இருக்கலாம். இதனை ஒப்புக் கொள்வது எளிதல்ல. இதற்கு சற்று மனவுறுதி வேண்டும். நமது அதிச சமூகத்தைச் சேர்ந்த சகோதர-சகோதரிகள் நமக்கு ஆதரவு கொடுக்க வேண்டும். எனவே, ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப்போம். நமது சக அதிச உறுப்பினர்களுக்கும் ஒன்றிப்பின் பாலமாக இருப்போம். நமது வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் நமது முயற்சியை அருள்பொழிவு செய்து, ஆதரவாக இருக்கும் கடவுளை முழுமையாக நம்புவோம்.

### கலந்துரையாடுவோம்

- நமது குடும்பங்களிலும் சமூகத்திலும் பிரிவினையை உண்டாக்கும் விதத்தில் நம்மிடையே மாற்றங்களை ஏற்படுத்தும் சில வழிவகைகள் என்ன?
- பிறருடனான உறவில் பிரிவினையை ஏற்படுத்த காரணமாக இருக்கும் எனது வாழ்வின் பகுதியை அடையாளம் காண என்னால் முடிகிறதா?

## இறைவார்த்தை:

### யோவான் 17:20-23

“அவர்களுக்காக மட்டும் நான் வேண்டவில்லை; அவர்களுடைய வார்த்தை வழியாக என்னிடம் நம்பிக்கை கொள்வோருக்காகவும் வேண்டுகிறேன். எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும். நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன். இவ்வாறு, நான் அவர்களுள்ளும் நீர் என்னுள்ளும் இருப்பதால் அவர்களும் முழுமையாய் ஒன்றித்திருப்பார்களாக. இதனால் நீரே என்னை அனுப்பினீர் எனவும் நீர் என்மீது அன்பு கொண்டுள்ளதுபோல் அவர்கள் மீதும் அன்பு கொண்டுள்ளீர் எனவும் உலகு அறிந்து கொள்ளும்”

### சிந்தனை:

- வாசகத்தைச் சத்தமாக வாசித்து திறந்த மனத்தோடு கேட்கவும்.
- வார்த்தையோ வசனமோ உங்கள் மனதைத் தொடும் வரை மௌனமாக இதை வாசிக்கவும்.
- அந்த வார்த்தை அல்லது வசனம் வழி உங்களுக்கு தூய ஆவியார் சொல்வது என்ன?
- ஆண்டவரின் குரலுக்கு நீங்கள் கூறும் பதில் என்ன?
- சிறிய குழுக்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள் (3-4 பேர்)

### செயல்:

- எனது குடும்பத்தில் ஒற்றுமையை ஊக்குவிக்க, எனது இல்லத்தில் “பிறன் நலன் நாடும் அம்சங்களை” அடையாளம் காண்பதற்கான ஒரு வழி என்ன?
- எனது சுற்றுவட்டாரத்தில் அல்லது வேலையிடத்தில் அல்லது சமுதாயத்தில், “பிறன் நலன் நாடும் அம்சங்களை” அடையாளம் காண்பதற்கான ஒரு வழி என்ன?